**பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகம் - 2016**

---

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் ஏற்பாடுகளின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியத்தினால் மானியங்களுக்கான காலக்கழிவினை செய்வதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் போது நிறுவனத்திற்கு மானியமாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 284,016 பெறுமதியான புத்தகங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதியம் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்புக்களின் பெறுமதி ரூபா 534,370 ஆக இருந்ததுடன் அத்திகதியில் களஞ்சிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 420,520 ஆக இருந்தமையால் ஆண்டின் இறுதியில் இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகைகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் இருப்புப் பெறுமதி மற்றும் பௌதீக இருப்பு பெறுமதி என்பவற்றிற்கிடையே ரூபா 113,272 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு அறவிடப்பட வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது நட்டமொன்றாகப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 60,062 கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் வட்டி வருமானம் என்பன அப்பெறுமதியால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் பேணப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 36,040,387 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 39,700,003 ஆக இருந்தமையால் மொத்தச் நிலையான சொத்துக்களில் ரூபா 3,659,616 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் சஞ்சிகைகளின் பெறுமதி ரூபா 1,118,489 ஆக இருந்த போதிலும், நூலகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 1,265,973 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 147,484 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் பற்றாக்குறை ரூபா 1,985,332 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,971,036 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 4,985,704 இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 22,997,327 ஆல் அதிகரித்திருந்த போதிலும், அரசின் மானியங்கள் ரூபா 11,400,000 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 5,771,331 ஆலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பற்றாக்குறையின் வீழ்ச்சி தொடர்பில் விஷேடமாகத் தாக்கமளித்திருந்தது.

கடந்த 05 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது தொடர்ச்சியான பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதும், ஊழியர் ஊதியம் மற்றும் ஏனைய சீராக்கங்களின் பின்னர் பெறுமதி சேர் அதிகரிப்பு அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது அரசின் மானியங்கள் 11 மில்லியனால் அதிகரித்தமை கரணமாக பற்றாக்குறை 71 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்த போதிலும், அதற்கு ஒப்பாக பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதி 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்து பாளி மற்றும் பௌத்த விடயத் துறைகள் தொடர்பான பட்டப்பின்படிப்பினை தரமாக கற்பித்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல், பட்டப்பின் பட்டங்கள், டிப்ளோமா சான்றிதழ், சான்றிதழ் பத்திரம் மற்றும் ஏனைய கலைத்திறன்களை மதிப்பிடல் மற்றும் வழங்குவதற்கு தகைமை பெற்ற நபர்களை பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை செய்தல் மற்றும் பதவியை ஏற்படுத்துதல், இடைநிறுத்துதல் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை செய்தல் என்பன நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

நிறுவகத்தின் இந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கல்விசார் செயலாற்றல்**

நிறுவகத்தின் 2016 பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 527 ஆக இருந்ததுடன், அதில் 464 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். முன்னைய ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 443 ஆக இருந்ததுடன், 390 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். முன்னைய ஆண்டில் 314 பேர் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன், அதாவது 80 சதவீதமாக இருந்ததுடன், மீளாய்வாண்டில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 419 ஆக அதாவது 79 சதவீதமாக இருந்தது.

**(ஆ) ஆராய்ச்சி மானியங்கள்**

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளை வெளியிடுவதன் மூலம் பல்கலைக்கழகத்தை உயர் நிலைக்கும் தரமான நிலைக்கும் கொண்டு வருவதன் மூலம் ஆராய்ச்சி முடிவினை பொருளாதார அபிவிருத்தியை நோக்கி பயன்படுத்துவதன் மூலம் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

அதற்காக ஆராய்ச்சி மானியங்களாக திறைசேரியிடமிருந்து ரூபா 1,000,000 வழங்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொள்ளும் பத்து உத்தியோகத்தர்களுக்கு நிறுவகத்தில் காணப்படும் போது ஒரு விரிவுரையாளருக்கு மாத்திரம் ரூபா 380,000 தொகையான ஆராய்ச்சி மானியமொன்றை ஆராய்ச்சி செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 200,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கிடைக்கப் பெற்றிருந்த பணத்தில் 20 சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஆராய்ச்சிக்கான ஈடுபாட்டில் குறைவொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) மூலதன மானியங்கள்**

கல்வித்துறைகளில் உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதன் நடவடிக்கைகளை செயற்தினாகவும் வினைத்திறனாவும் நிறைவேற்றும் நோக்கில் அரசின் மூலம் நிதிஏற்பாடு வழஙப்பட்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டுகளில் கிடைத்த மூலதன மானியங்களில் ஆண்டின் ஆரம்பம் வரை ரூபா 502,938 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் போது ரூபா 6,202,115 தொகையில் ரூபா 2,920,832 மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிதிஏற்பாட்டில் 48 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செலவிடப்படாத மூலதன மானியங்களின் மீதி ரூபா 3,784,221 ஆக இருந்தது. இம்மானியம் அலுவலகம், கற்றல் உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் என்பவற்றைக் கையேற்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பணத்தை அதற்காக பயன்படுத்தாமை நிறுவகத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளிப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) உழைக்கப்படும் வருமானத்தைப் பயன்படுத்தல்**

பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் உழைத்த மொத்த வருமானத்திலிருந்து ஆயுர்வேத பாடநெறிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் ரூபா 137,452 தொகை கடந்த 04 ஆண்டுகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 67,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அதில் ரூபா 204,452 மீதியொன்று காணப்பட்டது. அவ்வாறே 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நீண்டகால பாடநெறிகளுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 3,488,586 வருமானத்தில் செலவிடப்பட்ட அளவு ரூபா 878,624 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 2,609,962 ஆன மீதியொன்று சேமிப்பாக காணப்பட்டது.

இப்பணத்தை நிறுவகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(உ) நூலக நிர்வாகம்**

நூலக பயன்பாட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் காணாமல் போயிருந்த 693 புத்தகங்களில் ரூபா 30,725 பெறுமதியான 156 புத்தகங்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் வரையான காலப்பகுதிக்குரியதாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) இந்த நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 38 வருட காலம் வாடகைக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது கட்டிட வாடகையான மாதமொன்றுக்கு ரூபா 764,583 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 9,174,996 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிறுவகத்திற்கு காணியொன்றைக் கொள்வனவு செய்து கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பிரதான செயற்பாடொன்றாக காண்பித்து அதற்காக ரூபா 500,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் திறைசேரியிடமிருந்து அதற்காக நிதிஏற்பாடு கிடைக்காதிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கத்தைப் பரீட்சித்த போது 06 மாத காலம் கடந்த ரூபா 109,389 தொகை இனங்காணப்படாத வருமானமாக அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது மாணவர் செயலாற்றலின் கீழ் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 16 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் 04 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே இரண்டு புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் புதிய பாடநெறிகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் எதிர்வுகூறப்பட்ட வருமானங்களையும் உள்ளபடியான வருமானங்களையும் கருத்திற் கொள்ளும் போது வருமானம் ரூபா 14,967,643 ஆல் அதிகரித்திருந்ததுடன், அதற்காக விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் பாடநெறி வருமானம் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தன. அவ்வாறே 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும், உள்ளபடியான செலவினங்களையும் பரீட்சித்த போது செயற்பாட்டுச் செலவினம் கூடுதலாக எதிர்வுகூறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகை ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்படாமை. |
| (ஆ) பாதிட்டுக் கட்டுப்பாடு | தேவைப்பாட்டை மிகைத்து செலவினங்கள் எதிர்வுகூறப்பட்டிருந்தன. |
| (இ) நூலக நிர்வாகம் | நூலகப் புத்தகங்களை மீள ஒப்படைத்தல், புத்தக கணிப்பீடு, புத்தகங்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தல், புத்தகங்கள் காணாமல் போதல் |